# ரஜப் மாதத்தின் சில பித்அத்துகள்

## 1-ரஜப் மாதத்தின் 27 வது இரவு இஸ்ரா, மிஃராஜ் பிரயாணம் நிகழ்ந்தது என அந்த இரவை கொண்டாடுதல்.

இஸ்ரா, மிஃராஜ் குறிப்பிட்டு இந்த இரவுதான் நிகழ்ந்தது என்று ஆதாரப் பூர்வமான ஹதீஸ்களில் குறிப்பிடப்படவில்லை, இஸ்ரா மிஃராஜ் இரவு குறிப்பிடப்பட்டு வந்த அனைத்து ஹதீஸ்களும் ஹதீஸ்கலை அறிஞர்களிடம் உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் இரவு குறிப்பிடப் பட்டாலும் அந்த இரவில் வணக்கங்கள் எதையும் செய்வதற்கு முஸ்லீம்களுக்கு அனுமதியுமில்லை. மேலும் அந்த நாளில் கொண்டாட்டங்கள், அல்லது குறிப்பிட்ட வணக்கங்களைச் செய்வது கூடாத ஒரு செயலாகும்.

(அஷ்ஷெய்ஹ் அப்துல் அஸிஸ் அவர்களின் அத்தஹ்தீர் மினல் பிதஃ என்ற நூலைப் பார்க்கவும்)

## 2-ஸலாதுல் ரஆகிப் என்று அழைக்கப்படும் தொழுகை.

ஹாபில் பின் ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: ரஜப் மாதத்தில் அந்த இரவைக் குறித்து குறிப்பிட்ட தொழுகை ஏதும் நிறைவேற்றுதல் பிழையானதாகும். ரஜப் மாதத்தின் முதல் ஜூம்ஆ இரவு தொழும் அல் ரஆகிப் தொழுகையின் சிறப்பு பற்றி அறிவிக்கப்பட்ட அனைத்து ஹதீஸ்களும் பொய்யானதும், பிழையானதும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இந்தத் தொழுகையைப் பற்றி அனைத்து உலமாக்களும் பித்அத் என்றே கூறுகின்றனர். நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின் உறுவான முதல் பித்அத்தாகும். எனவே தான் முன் சென்றோர் இதைப் பற்றி அறிந்திருக்கவுமில்லை, இதைப் பற்றி ஆய்வு செய்யவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இப்னு ரஜப் (ரஹ்) அவர்களின் லதாஇப் அல் மஆரிப் என்ற நூலைப் பார்க்கவும்).

## 3-ரஜப் மாதத்தில் அல்லது அதன் சில நாட்களில் நோன்பு வைத்தல்.

ஹாபிழ் பின் ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ரஜப் மாதத்தின் சிறப்பு பற்றியோ, அல்லது அதில் நோன்பு வைப்பது பற்றியோ, அல்லது குறிப்பிட்ட நாட்கள் நோன்பு வைப்பது பற்றியோ, குறிப்பிட்டு இரவுத் தொழுகை தொழுவது பற்றியோ ஆதாரமாக எடுப்பதற்கு எந்த விதமான ஹதீஸும் வந்ததில்லை.

(ரஜப் மாதத்தின் சிறப்பு பற்றி இமாம் இப்னு ஹஜர் (ரஹ்)எழுதிய தப்யீனுல் அஜப் என்ற நூலைப் பார்க்கவும்).

## 4-ரஜப் மாதத்தில் உம்ரா செய்தல்

ரஜப் மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் உம்ரா செய்ததாக எந்த ஆதாரமும் இல்லை. சில மனிதர்கள் நினைப்பது போல மற்றய மாதங்களில் செய்யப்படும் உம்ராவின் சிறப்பை விட ரஜப் மாதத்தில் செய்யப்படும் உம்ராவுக்கு எந்தவித சிறப்பும் இல்லை.
நபி (ஸல்) அவர்கள் நான்கு உம்ரா செய்ததாக அறிவிக்கப்படுகிறது. ஹஜ்ஜூடன் இணைத்துச் செய்த உம்ராவைத் தவிர மற்றய அனைத்தையும் துல் கஃதா மாதத்திலேயே செய்தார்கள்.
1-ஹிஜ்ரி 6ம் ஆண்டு ஹுதைபிய்யா உம்ரா.
2-7ம் ஆண்டு உம்ரதுல் கழா.
3-மக்கா வெற்றியன்று ஜிஃரானா என்ற இடத்திலிருந்து சென்று செய்த உம்ரா.
4-ஹஜ்ஜூடன் இணைத்துச் செய்த உம்ரா.

(இப்னுல் கையூம் (ரஹ்) அவர்களின் ஸாதுல் மஆத் என்ற நூலிருந்து)

**தமிழில்: மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)**